## பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு

# இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம்

## கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் அமைந்துள்ள இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் தோட்டங்களில் அளவை செயற்பாடுகளை மேற்கொண்டு காணிகளில் எல்லை தூண்களை நடுவதற்கான விலைமனுக்கோரல்

கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் அமைந்துள்ள இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் தோட்டங்களில் அளவை செயற்பாடுகளை மேற்கொண்டு காணிகளில் எல்லை தூண்களை நடுவதற்காக விலைமனு கோரப்படுகின்றன. அது கீழ் குறிப்பிடப்ட்ட வகைகளில் மேற்கொள்ளல் வேண்டும்.

- தூண்கள் ஒன்றோடொன்று 40 தூரத்தில் நிறுவுதல் வேண்டும்.
- எல்லைகளை தெளிவாக அடையாளம் காணாத இடங்களில் இந்தத் தூரத்தை குறைத்து தூண்களை நிறுவுதல் வேண்டும்.
- தரைக்கு மேற்பரப்பில் மேலால் உயர்த்தி 60 சென்டிமீற்றர் மற்றும் நிலத்துக்குள் 40 சென்டிமீற்றர் என்ற வகையில் தூண் நடுதல் வேண்டும்.
- தூணின் வடிவம் சதுர அமைப்பு என்பதோடு மொத்த உயரம் 100 சென்டிமீற்றர் மற்றும் விட்டம் 12.7 சென்டிமீற்றர் ஆகும்.
- துளையின் ஆழம் 45 சென்டிமீற்றர் மற்றும் துளையின் அகலம் 18 சென்டிமீற்றர் ஆக இருத்தல் வேண்டும்.
- துளையின் ஆழத்தில் 5 சென்டிமீற்றர் கொங்கிறீற் அடித்தளம் அமைத்தல் வேண்டும் என்பதோடு துணை வைத்து கொங்கிறீட் இட்டு தூணை அமைத்தல் வேண்டும். (1:2:4 என சீமெந்து: மணல்: கல் கலவையை இடுதல் வேண்டும்)
- தற்போது தூண் இருக்கின்ற இடம் தொடக்கம் குறித்த இடத்திற்கு எடுத்துச் சென்று நிறுவுதல் வேண்டும்.

இந்த வேலையை செய்வதற்கு ஆர்வம் காட்டுகின்ற விண்ணப்பதாரர்களுக்கு விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான படிவம் உட்பட கேள்விமனு ஆவணங்களை இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தில் 2026.05.25 ஆம் திகதி தொடக்கம் 2026.06.09 ஆம் திகதி முற்பகல் 9.00 தொடக்கம் பிற்பகல் 4.00 வரை வாங்க முடியும். இந்த கேள்விமனு ஆவணங்களை 2026.06.10 ஆம் திகதி பிற்பகல் 2.00 இற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனதின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு முடியும். விலைமனுக்களை சமர்ப்பிக்கின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் அமைந்துள்ள தோட்டங்களில் எல்லைத் தூண் நடுவதற்காக விலைமனு கோரல்'' என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

2026.06.10 ஆம் திகதி பிற்பகல் 2.00 இற்கு விலைமனுக்களை ஏற்பது நிறைவடைவதோடு விலைமனுக்களை ஏற்பது முடிவுற்ற உடன் கேள்விமனுக்களை திறக்கும் குழுவின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படுவதோடு அந்த சந்தர்ப்பத்திற்கு உங்களுக்கு அல்லது உங்களது பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும். அதேபோன்று தாமதித்துக் கிடைக்கின்ற விலைமனுக்கள் தொடர்பில் கூட்டுத்தாபனம் பொறுப்பேற்காது.

ஏதேனும் விலைமனு அல்லது விலைமனுக்களின் பகுதியை ஏற்பது அல்லது நிராகரிப்பது அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழு வசமானது என்பதோடு, அது இறுதி முடிவாகும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு**
**இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம்**
**இலக்கம் 257, சிறிதம்ம மாவத்தை, கொழும்பு.**
**விசாரணை – 011-4194879**
**திகதி – 2026.05.25**